# திருக்குறள்

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்

துறந்தார் துறந்தார் துணை.

**விளக்கம்**:-

அதிக அளவு கோபம் உடையவர்கள் இறந்தவர்களுக்கு ஒப்பாவார்கள். கோபத்தை அடியோடு ஒழித்தால் துறவிகளுக்கு ஒப்பாவார்கள்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத் தனையது உயர்வு.

**விளக்கம்**:-

தண்ணீரின் அளவைப் பொருத்துதான் தாமரை தண்டின் நீளம் அமைந்திருக்கும். அதுபோல மனிதர்களின் ஊக்கத்தின் அளவைப் பொருத்துதான் அவர்களின் வாழ்க்கைத்தரம் அமைந்திருக்கும்.

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்

அவையகத்து அஞ்சா தவர்.

## விளக்கம்:-

போர்களத்தில் எதிரிகளுடன் போரிட்டு இறந்தவர்கள் பலர் உண்டு. ஆனால் கற்றவர்கள் அவையில் அஞ்சாமல் பேசுபவர்கள் சிலர் தான்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு.

## விளக்கம்:-

நண்பர்களை காணும்போது முகம் மட்டும் மகிழ்ந்தால் அது உண்மையான நட்பு இல்லை. நண்பர்களை காணும்போது முகமும், உள்ளமும் சேர்ந்து மகிழ்ச்சியடைந்தால் தான் அது உண்மையான நட்பு ஆகும்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு.

## விளக்கம்:-

நாம் அணிந்திருக்கும் உடை நம் உடலை விட்டு நழுவும் போது கைகள் உடனே அதனை சரி செய்யும். அதுபோல நம் நண்பன் ஆபத்தில் இருக்கும் போது உடனே விரைந்து சென்று காப்பாற்ற வேண்டும்.